இந்த அவையின் மூலமாக வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு சொல்லிக்கொள்வேன். விரைவிலே இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதை உடனே ரத்து செய்ய வேண்டும். அந்த முயற்சியில் வருவாய்த்துறை ஈடுபடவேண்டும். அந்த இடம் பள்ளிக்குத் தேவைப்படுவதால்—குறைந்த இடம் தான், நான் நேரிலே பார்த்திருக்கிறேன்—விளையாட்டு மைதானத்திற்குத் தேவைப்படுவதால், அதை உடனே ஆர்ஜிதம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை வருவாய்த் துறை அதிகாரிகள் விரைவிலே எடுக்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மேலவையில் இருப்பதால், வினா எண்கள் 1084 முதல் 1086 வரை பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

கும்பகோணம் நகராட்சியில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர் களுக்கான குடியிருப்புகளைப் புதுப்பிக்கும் திட்டம்

வினா எண் 1087—*திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகராட்சியில் துப்புரவுத் தொழில் செய்யும் நகர சுத்தி தொழிலாளர்கள் வசிக்கும் பழைய மீன் மார்க்கெட் காலனி குடியிருப்புகளைப் புதுப்பித்து வீட்டு வசதிக் கழகத்தின் சார்பில் கட்ட திட்டமிட்டுள்ள திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) நிதி பற்றாக்குறை நிலையின் காரணமாக குடிசை மாற்று திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டப்படும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் கோவை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டால் போதும் என்றும், இப்பணி ஏனைய வெளியூர் மாவட்டத் தலை நகரங்களுக்கும், சிறு நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது. எனவே, கும்பகோணம் பழைய மீன் மார்க்கெட் பகுதியில் குடிசை மாற்றும் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 72 குடியிருப்புகள் ரூ 7.035 லெட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்குரிய திட்டம் தற்போது செயல்படுத்துவதற்கில்லை.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற நோக்கத்தைப் பார்க்கிற போது மாவட்டத் தலைநகரங்களில் மட்டும்தான் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இப்படிப்பட்ட நகர சுத்தித் தொழிலாளர்களுக்கான வீடுகள் கட்டும் பணி செய்யப்பட்டு, அதற்கு அடுத்தபடியாகத்தான் நகரத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள் கொடுக்க முடியும் என்று தெரிகிறது. மாண்புமிகு

அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்தைப் பார்த்து இருக்கிறார்கள். ஏற்கனவே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவரும் அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டில் இருக்கும் பல்வேறு காலனிகளிலேயே இந்தக் காலனி மிகவும் மோசமான நிலையில் இருப்பதால், இன்றைக்கு அவைகள் கீழே விழும் நிலையில் இருப்பதால் அந்தக் காலனிக்கு அரசு தனி கவனம் செலுத்தி மீண்டும் ஆலோசனை செய்து, அந்தக் கும்பகோணத்தில் உள்ள பழைய குடியிருப்புகளைக்குடிசை மாற்று வாரியத்தின் மூலம் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இரண்டு முறை ஆலோசனை செய்யப்பட்டது. ஆனால் கோவை, திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டும் செய்தால் போதும். நிதி ஆதாரம் இல்லை என்பதால் மற்ற இடங்களில் விரிவுபடுத்த வேண்டாமென்று அரசு முடிவு எடுத்து இருக்கிறது.

திரு. நன்னிலம் அ. கலையரசன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தின் மூலமாகக்கட்ட இயலவில்லையென்றால், அங்கேயிருக்கும் கும்பகோணம் நகராட்சி அரசு மூலமாகக் கடன் வாங்கிக் கட்டுவதற்கு இயலுமா? அந்த வகையில் ஆலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இந்தக் கேள்வி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கவேண்டும்.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என்று சொன்னார்கள். எந்தத் துறையில் இது செய்யவேண்டியிருந்தாலும். இந்த அரசு அங்கேயிருக்கும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டித் தர முன் வரவேண்டும். அங்கேயிருப்பவர்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்ற வீடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். பல ஆண்டுகாலமாக இது சம்பந்தமாக அவர்கள் நகராட்சி ஆணையர் மூலமாக முறையீடு செய்து கொண்டு இருக்கிறார்கள். இது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருப்பதாகச் சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. எஸ். ஆர். இராதா அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாக அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள நானும் போய்ப் பார்த்து

இருக்கிறேன். நிதித் துறையில் அதற்கு ஆதரவு கொடுக்காத காரணத்தால் ஏற்கனவே முடிவு எடுக்கப்பட்டபடி கோவை. திருச்சி, மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலை நகரங்களில் மட்டும் குடிசை மாற்று வாரியம் மூலம் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது. இதற்கு மேல் இப்போது ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, நிதிநிலை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள், ஒப்புக்கொள்கிறேன். அந்த வீடுகள் பிரிட்டிஷ் பீரியடில் கட்டப்பட்டவை. இப்போது மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன; பாதிக்குமேல் இடிந்து விட்டன. அவர்கள் எல்லாம் நகர சுத்தித் தொழிலாளர்கள்; உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அரசின் நிதிநிலை சரியில்லை என்றாலும் அவர்களுடைய சொந்த முயற்சியில் சீர்செய்துகொள்ள உத்தரவு பிறப்பிக்கப் படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கும்பகோணத்தில் இருப்பதைப் பற்றிச் சொல்கிறார்களா அல்லது வேறு இடமா என்று தெரியவில்லை. நானும் அதைப் பார்த்திருக்கிறேன். அந்த குடியிருப்புகள் பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்டதா எனத் தெரியவில்லை. அவை வெறும் குடிசை வீடுகள்தான்,

திரு. எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, நான் விவாதத்திற்காகச் சொல்லவில்லை. அமைச்சரவர்கள் இரண்டு இடங்களைப் பார்த்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது).

This is a vital question. Either the Government must como forward to construct their houses. Or they should be allowed to construct at their own cost.

MR. SPEAKER: There are so many places like that.

திரு. எல். இளையபெருமாள்: அரசாங்கம் கட்டிக்கொடுக்க நிதிநிலை சரியில்லை என்றால் அவர்களுடைய சொந்த முயற்சியால் கட்டிக்கொள்ள உத்தரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, சொந்த முயற்சியில் கட்டுவதற்கு அவர்கள் கேட்க வேண்டு மென்றால் அங்குள்ள நகராட்சியில்தான் கேட்க வேண்டும். இங்கே விபரம் தொய வேண்டுமென்றால் உள்ளாட்சித் துறை

அமைச்சரிடம் கேள்வி போட வேண்டும். நான் குடிசைமாற்று வாரியம் சம்பந்தப்பட்ட கேள்விக்குத்தான் பதில் சொல்ல முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி குடிசைமாற்று வாரியம் பற்றியதால் இந்த அளவுக்குத்தான் பதில் எதிர் பாக்க முடியும்.

அம்மைநாயக்கனூர் பேரூராட்சிக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1088—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்மைய நாயக்கனூர் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

(இ) அம்மைய நாயக்கனூர் பேரூராட்சியில் இணைந்துள்ள கிராமங்கள் அனைத்திற்கும் இத்திட்டத்தின் மூலம் குடி தண்ணீர் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) திட்ட வேலைகள் முடிவு பெறும் நிலையில் உள்ளன.

(ஆ) 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப் பட்டது.

(இ) அம்மாபட்டி, மாவுத்தன்பட்டி, கோடைரோடு, ஜகன்னாதபுரம், சொக்கலிங்கபுரம், புதூர், அம்மை நாயக்கனூர் மற்றும் இடையப்பட்டி ஆகிய ஏழு குடியிருப்புகளுக்கு மட்டும் குடி தண்ணீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த அம்மை நாயக்கனூர் பேரூராட்சியில் 19 'ஹாம்லெட்'கள் இருக்கின்றன. அந்த 19—ல் வெறும் ஏழை மட்டும் எடுத்துக் கொண்டால் பாக்கி பேர்கள் தண்ணீர் இல்லாமல் என்ன செய்வார்கள்? அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் நீர் எடுத்துச்செல்லும் குழாய் செல்லும் வழியில் 'வே சைடு வில்லேஜஸ்' என்ற அளவில் கீழ்க்கண்ட குடியிருப்புகளுக்கு மட்டும் தற்போது குடிநீர் வழங்க வழிவகைச்